இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 182 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 29 – செவ்வாய்க்கிழமை 11 பிப்ரவரி 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 182 : Thiruvalluvar Year - 2056 - Thai 29 - Tuesday 11 February 2025 - Madurai 12 Pages ₹ 5.00

## ஏழை மக்களுக்கான நிவாரணத்தில் மிகப்பெரும் புரட்சி! அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய திருப்பம்!

# 6 மாதங்களுக்குள் 6,29,000 பேருக்கு பட்டா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு!


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.2.2025) தலைமைச் செயலகத்தில், 18வது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

**சென்னை, பிப்.11-**

**தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் மாநிலம் முழுவதும் அடுத்த ஆறு மாதங்களுக்குள் 6 லட்சத்து 29 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது ஏழை மக்களுக்கான நிவாரணத்தில் மிகப்பெரும் புரட்சி என்றும் அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய திருப்பம் என்றும் கருதப்படுகிறது.**

நேற்று (10.02.2025) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஏழை மக்களுக்கான நிவாரணத்தில் மிகப் பெரிய புரட்சியை செய்திருக்கிறார். அந்த புரட்சி என்னவென்று சொன்னால், சென்னையை சுற்றியிருக்கக் கூடிய 4 மாவட்டங்களில், பெல்ட் ஏரியா பகுதிகளில் இருக்கக்கூடிய 32 கிலோ மீட்டரில் குடியிருப்பவர்கள் ஆக்கிரமிப்பு செய்து நீண்ட நெடுங்காலமாக குடியிருப்பவர்கள் பட்டா பெறமுடியாமல் சிரமப்படுவதும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யமுடியாமல் இருப்பதும் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சென்றதின் விளைவாக இன்றைக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் சென்னையை சுற்றியிருக்கக்கூடிய அந்த நான்கு மாவட்டங்களில் இருக்கக்கூடிய பெல்ட் ஏரியா மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று சொல்லி முதலமைச்சர் அவர்கள் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்திருக்கிறார்கள்.

### 6 மாதத்தில் வழங்க முடிவு

முடிவு செய்த நேரத்தில், சென்னையில் மட்டும் 29,187 பேர் ஆட்சேபனையற்ற புறம்போக்கு பகுதியில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அந்த பட்டா வழங்குவதற்கான பணிகளை ஆறு மாத காலத்திற்குள் முடித்துக் கொடுக்கவேண்டும்என்றுசொல்லியிருக்கிறார்கள். இந்த பெல்ட் ஏரியா சட்டம் 1962ல் வந்தது.

1962லிருந்து 2025 வரை அதன் மீது எந்தவிதமான நடவடிக்கை எடுக்காமல் இருந்தது. இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக ஒரு முடிவெடுத்து ஆறு மாதத்திற்குள் பட்டா வழங்கவேண்டும் என்று ஆணையிட்டது மட்டுமல்லாமல், மாவட்ட அளவில் ஒரு குழுவும், சென்னையில் மாநில அளவில் ஒரு குழுவும் அமைத்து உடனடியாக அந்தப் பணிகளை துவங்கி ஆறு மாத காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளை நாங்கள் செய்யவிருக்கிறோம். சென்னையை சுற்றியிருக்கக்கூடிய 4 மாவட்ட மக்களுக்கும், மிகப்பெரிய வரப்பிரசாதமாக இது அமையவிருக்கிறது.

### 86,000 பேருக்கு பட்டா!

மதுரை, திருநெல்வேலி போன்ற மாநகராட்சிகளில் இதேபோல பிரச்சினையிருக்கிறது. அங்கே இருப்பவர்களுக்கும் பட்டா வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, மாநகராட்சி, நகராட்சி, மாவட்ட தலைநகரில் இருக்கக்கூடிய பகுதிகளுக்கெல்லாம் சேர்ந்து மொத்தம் 57,054 பேர் ஆட்சேபனையற்ற புறம்போக்கு பகுதிகளில் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்ற அந்த உத்தரவையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

ஏறத்தாழ 86,000 பேருக்கு பட்டா வழங்குகின்ற அந்த தீர்மானத்தை இன்றைக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் ஆறு மாத காலத்திற்குள் வழங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 86,000 பேர் போக இன்னும் விடுபட்டிருந்து மனுக்கள் வரும் என்று சொன்னால், அதையும் பரிசீலனை செய்யுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். 1962லிருந்து 2025வரை உள்ள பிரச்சினையை இன்றைக்கு முடிவு செய்திருக்கிறார்.

இதுவரை முதலமைச்சர் அவர்களின் ஆட்சி வந்த பிறகு, பத்து இலட்சத்து இருபத்தி ஆறாயிரம் பேருக்கு நாங்கள் பட்டா வழங்கி இருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் இன்னும் கொஞ்சம் விரைவுப்படுத்தி, வரும் ஆறு மாதத்திற்குள்ளாக ஆறு இலட்சத்து இருபத்தி ஒன்பாதாயிரம் பேருக்கு பட்டா வழங்குகின்ற அந்தப் பணியையும் செய்து கொண்டிருக்கிறோம்.

தொடர்ந்து பொதுமக்கள் பொதுவாக கலைஞர் வழியில் முதலமைச்சர் அவர்கள் ஒரு தனி மனிதனுக்கு குடியிருப்பதற்கு இடமோ, வீடோ இல்லாமல் இருக்கக்கூடாத அந்த உணர்வோடு ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த பெல்ட் ஏரியாவிற்கு எடுக்கப்பட்ட முடிவு மிகப் பெரிய அரசியல் வரலாற்று திருப்பமாக இந்த முடிவு இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பேட்டியளித்தார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (10.2.2025) சட்டப்பேரவைத் தலைவர் அறையில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள், ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற வி.சி. சந்திரகுமாருக்கு சட்டமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பி.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான தி.வேல்முருகன், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

# ஆளுநரின் தனிப்பட்ட விருப்பத்துக்கு இடம் கிடையாது!

## தமிழ்நாடு ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

**புதுடெல்லி, பிப்.11-**

**சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பும் மசோதா மீது ஆளுநர் எடுக்கும் முடிவை மாநில அரசுக்கு ஏன் தெரிவிப்பதில்லை என்று ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. பேரவையில் மறுமுறை நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாவையும் ஆளுநர் கிடப்பில் போடுவது ஏன் என்றும் நீதிபதிகள் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியுள்ளனர்.**

ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்குகள் மீது உச்ச நீதிமன்றத்தில் 4வது நாளாக நேற்று விசாரணை நடைபெற்றது. தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கறிஞர் ராகேஷ் திவேதி ஆஜராகி விரிவான வாதத்தை எழுத்து மூலம் தாக்கல் செய்து வாதிட்டார். முந்தைய நீதிமன்ற தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதிட்ட அவர், அரசியல் சாசன பிரிவு 200 குறித்து விரிவான வாதங்களை முன்வைத்தார். மசோதாக்களை மறுமுறை சட்டபேரவையில் நிறைவேற்றி அனுப்பினால் அதற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தாக வேண்டும் என்று அரசியல் சாசன பிரிவு 200 கூறுகிறது என தெரிவித்த தமிழ்நாடு அரசு தரப்பு வழக்கறிஞர் ராகேஷ் திவேதி, மசோதாக்களை நிறுத்தி வைக்கும் வகையில் நான்காவதாக முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளது என்ற ஒன்றிய அரசின் வாதத்தை நிராகரிக்க வேண்டும். ஏனெனில் அரசியல் சாசனம் அப்படி கூறவில்லை என்று வாதிட்டார். அமைச்சரவை முடிவு படியே ஆளுநர் செயல்பட முடியும் என்ற அளவில் தான் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. அவர் தனிப்பட்ட எந்த முடிவுகளையும் எடுக்க முடியாது என்றும் தமிழ்நாடு அரசு வழக்கறிஞர் வாதிட்டார்.

அப்போது நீதிபதிகளும் சில கேள்விகளை ஒன்றிய அரசு தரப்பிற்கும் ஆளுநருக்கும் முன்வைத்தனர். சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பி வைக்கும் மசோதா மீது ஆளுநர் எடுக்கும் முடிவை ஏன் வெளிப்படையாக மாநில அரசுக்கு தெரிவிக்கவில்லை? ஆளுநர் மனதில் என்ன இருக்கிறது என்பதை தெரிவிக்காமல் மசோதாவை மறு ஆய்வு செய்யச்சொல்லி திருப்பி அனுப்புவது எப்படி முறையாகும்? காரணம் எதுவும் தெரிவிக்காமலே ஆளுநர் மசோதாக்களை நிறுத்திவைத்துள்ளார். ஒன்றிரண்டு ஆண்டுகள் நிறுத்தி வைத்த பின்னர் குடியரசு தலைவருக்கு மசோதாவை அனுப்பி வைத்துள்ளார். இது முன்னுக்குப் பின் முரணாக இல்லையா? என்று அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பிய நீதிபதிகள், ஒன்றிய அரசு அதற்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று அட்டர்னி ஜெனரலிடம் அறிவுறுத்தினர்.

துணைவேந்தர் நியமனம் யு.ஜி.சி விதிமுறைப் படி இல்லை என்று ஆளுநர் நினைத்தால் அதனை ஒரு முறையாவது மாநில அரசுக்கு தெரிவிக்காதது ஏன்? என்றும் நீதிபதிகள் வினவினர். ஆளுநரின் அதிகாரம் குறித்து ஆரம்ப காலத்திலேயே அரசியல் நிர்ணய சபையில் விரிவான விவாதம் நடத்தப்பட்டுள்ளது என்றும் அம்பேத்கர் அப்போதே உரிய விளக்கம் அளித்துள்ளார் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து ஒன்றிய அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் தமது வாதத்தை முன் வைத்தார்.